1974 சனவரி 21]

திரு. அ. அய்யணன் அம்பலம்: தலைவரவர்களே, ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு மேல் மாணவர்கள் இருக்கின்ற தொடக்கப் பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர்களை தலைமை ஆசிரியர்களாக நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா? தொடக்கப் பள்ளிகள் பலவற்றில் 500, 600-க்கு மேற்பட்ட மாணவர்கள் இருக்கின்றார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்பொழுது 5,000 க்கு மேற்பட்ட தொடக்கப்பள்ளிகள் இருக்கின்றன. அவைகளில் 1,190 பள்ளிகளில் பி.டி. ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாகப் போடப்பட்டிருக்கின்றார்கள். அடுத்துப் போடுகின்றபோது மாண்புமிகு உறுப்பினர் கூறியதைக் கவனத்தில் கொள்ளலாம்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: தலைவரவர்களே, தமிழக அரசு தமிழ் மொழியின் தரத்தை வளர்ப்பதை அடிப்படைக் கொள்கையாகக் கொண்டுள்ளது. இடை நிலைப் பள்ளிகளில் தமிழ் ஆசிரியர்களைத் தலைமை ஆசிரியர்களாக நியமிப்பது தமிழ் மொழியை நல்ல முறையில் மாணவர்கள் பயிலுவதற்கும், தமிழை முறையாகப் பயன்படுத்துவதற்கும் உதவும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதைத் தனியாகப் பரிசிலிக்க வேண்டும்.

Sculpture Training Centre, Mamallapuram

*17 *Q.*—THIRU G. SWAMINATHAN (on behalf of THIRU SAW. GANESAN): Will the Hon. the Minister for Education be pleased to state with reference to the answer to Question No. 68 on 8th February 1973—

(*a*) whether the service conditions of the staff of the Sculpture Training Centre, Mamallapuram have been revised on the lines of the Madras Educational Rules, so as to enable them to secure their pay, rights and duties, in accordance with those rules;

(*b*) if so, the cadre of the Instructors therein; and

(*c*) their scale of pay?

[1974 சனவரி 21

மாமல்லபுரம் சிற்பப் பயிற்சிக் கூடம்

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. சா. கணேசன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 8—2—1973-ல் 68-ஆம் எண்ணுள்ள வினுவிற்கு அளித்த விடையையொட்டி கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) மாமல்லபுரம் சிற்பப் பயிற்சிக் கூடம் கல்வித்துறை விதிகட்கு ஏற்ப சம்பளம், உரிமை, கடமை முதலியன வாய்ந்ததாக மாற்றியமைக்கப் பட்டுள்ளதா?

(இ) அப்படியானுல் ஆசிரியர்களின் பணி அமைப்பு (cadre) என்ன?

(உ) சம்பள ஏற்றம் (scale) எப்படி?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) (இ) & (உ) மாமல்ல புரம் சிற்பப்பயிற்சிக்கூடம், சமீபத்தில்தான் தொழில்வணிகத் துறையிலிருந்து கல்வித்துறைக்கு மாற்றப்பட்டுள்ளதால் இதனுடைய பணியமைப்பு, சம்பள அமைப்பில் எவ்வித மாறுதலும் இன்னும் செய்யப்படவில்லை. இச்சிற்பப் பயிற்சிக்கூடம் எவ்வாறு நடைபெறுகிறது என்பதனை கவனித்து அதற்குப் பின் கல்வித்துறையின் விதிகளுக்கு ஏற்ப, இப்பயிற்சிக்கூடத்தின் பணி அமைப்பு, சம்பள ஏற்றம் முதலியவற்றை மாற்றி அமைப்பதுபற்றி கரு தப்படும்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இந்த மாமல்லபுரம் சிற்பப் பயிற்சிக் கூடத்தில் என்ன விதமான பணி நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அந்த சிற்பப் பயிற்சிக்கூடத்தில் சிற்பங்கள் செதுக்குவதற்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. கருங்கல், சுண்ணும்பு, சிமெண்ட், கான்கிரீட் இவைகளிலிருந்து சிற்பங்கள் செதுக்கக் கற்றுக் கொடுக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக கருங் கல்லிலிருந்து சிற்பம் செதுக்கக் கற்பிக்கப்படுகிறது. பூம்புகார் கலைக் கூடத் தில் வைக்கப்பட்டுள்ள கருங்கல் சிற்பச் சிலைகள் யாவும் இந்தப் பயிற்சிப் பள்ளியில் செதுக்கப்பட்டவைதான். இப்பொழுது கல்வித் துறையின் கீழ் வந்திருக்கிறது. அது ஒரு விதமான கல்வியைப் பயிற்றுவிப்பதன் காரண மாக கல்வித் துறையின் கீழ் இருப்பதுதான் நல்லது என்று மாற்றப்பட்டது.

திரு எல். பலராமன்: தலைவர் அவர்களே, தொழில் துறையிலிருந்து கல்வித் துறைக்கு மாற்றப்பட்டதன் நோக்கம் என்ன? அதனுல் எவ்வளவு செலவு அதிகமாகியது? மேலும் எவ்வளவு செலவாகும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இது ஒரு பயிற்சிக் கூடமாக இருப்பதன் காரணமாக, பள்ளிக்கூடம் என்று கருது வதால், தொழில் துறையிலிருந்து கல்வித் துறைக்கு மாற்றப்பட்டது. அது மட்டுமல்லாமல், மதிப்பிட்டுக் குழுவினரும், அவ்வாறு பரிந்துரை செய்திருந் தார்கள். தொழில் நடப்பது என்பதாலல்ல ; பயிற்சி நடக்கிறது என்ற காரணத் தால், மாற்றம் நல்லது என்று கருதப்பட்டது. எவ்வளவு செலவு என்பதைப் பற்றி விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால், விவரங்கள் சேகரித்து அளிக்கப்படும்.

Opening of a Casualty Department in the Thanjavur Medical College Hospital

* 18 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Health be pleased to state :

(a) whether there os any proposal with the government to open a Casualty Department in the Thanjavur Medical College Hospital; and

(b) If not, whether the Government are aware of the experienced by the villagers in and around this Hospital for want of the same?

தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அவசரச் சிகிச்சை பிரிவு தொடங்குதல்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச் சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சை மருத்துவக் கல்லூரி-மருத்துவமனையில் அவசரச் சிகிச்சைப் பிரிவு ஒன்றைத் தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) இல்லையெனில், இம்மருத்துவமனைப் பகுதியிலும், அதனைச் சுற்றிலு முள்ள கிராமப்புற மக்கள், அத்தகைய அவசரச் சிகிச்சைப் பிரிவு ஒன்றில்லா மல் அவதிப்படுவது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) அக்டோபர் திங்கள் 1973ல் விபத்து பிரிவு ஒன்று தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் திறப்பதற்கு அரசு அனுமதித்துள்ளது.

(இ) கேள்விக்கு இடமில்லை. அண்மையில் இது துவக்கப்பட்டுள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, அவசரச் சிகிச்சைப் பிரிவுக்கு வேண்டிய படுக்கை வசதிகள் அந்த மருத்துவ மனையில் செய்யப் பட்டுள்ளன வாவென்று அறிய விரும்புகிறேன்.